**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.244/2023**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் வியாழன் கிழமை ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாலசுப்பிரமணியன் | த/பெ.: | தங்கராசு |
| கிராமம்: | வானவன் மகாதேவி | தாலுக்கா: | வேதாரண்யம் |
| மதம்: | இந்து | தொழில்: | கூலி வேலை |
| வயது: | 40 | முகவரி: | வானவன் மகாதேவி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 19.02.2026

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் இந்த மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 29.05.2019 | முதல் தகவல் அறிக்கை (2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் புகார் மனுவை மனுதாரர் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றும், வேறொரு நபர் கொடுத்துள்ளார் என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.2 | 23.01.2019 | விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி | நகல் |
| ம.சா.ஆ.3 | 11.04.2019 | மனுதாரர் வாகனத்தின் இன்சூரன்ஸ் | நகல் |
| ம.சா.ஆ.4 | 07.05.2019 | மனுதாரர் வாகனத்தின் பர்மிட் | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.5 | 29.05.2019 | AR Copy | நகல் |
| ம.சா.ஆ.6 | -- | மனுதாரரர் பெயரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |

மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**<u>1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எனது பெயர் பாலசுப்பிரமணியன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். கூலி வேலை நான் தொடர்ந்து 30 நாள்கள் பார்ப்பேன் என்றால் பார்க்க மாட்டேன். விபத்து எப்போது நடந்தது என்றால் 29.05.2019-ல். விபத்து சமயத்தில் நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் ஸ்கூட்டியில் சென்றேன். அந்த ஸ்கூட்டி யாருக்கு சொந்தமான வண்டி என்றால் எனது தம்பி குணசேகரன் என்பவருக்கு சொந்தமானது. யார் அந்த வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் குணசேகரன் தான் ஓட்டி சென்றார். அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 03.00 மணி இருக்கும். விபத்து ஏற்பட்ட இடம் கொற்கை, செக் போஸ்ட் அருகில். செக் போஸ்ட் அருகில் எந்த வாகனமும் வேகமாக செல்லாமல் இருக்க தடை போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி செக் போஸ்ட் அருகில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். எனக்கு விபத்தினால் உடம்பில் எந்தெந்த பகுதியில் காயங்கள் ஏற்பட்டது என்றால் தலை பின் பகுதி, நெஞ்சு, இடது கால், வலது கை மற்றும் வலது பக்க கண்ணத்தில் காயங்கள் ஏற்பட்டது. நான் சம்பவ நாளில்



தலைக்கவசம் அணிந்திருந்தேனா என்றால் இல்லை. விபத்து ஏற்பட்டவுடன்

யார் என்னை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றால் நான் மயக்கமடைந்து விட்டதால் யார் சேர்த்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்னை எந்த மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் முதலில் திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்னர் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எத்தனை நாட்கள் சிகிச்சை பெற்றேன் என்றால் தெரியாது. நான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.5 ஆவணம் படி நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் இல்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் ஒன்றும் இல்லை என்றும், இந்த வழக்கிற்காக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக காயத்தின் தன்மையை தெரிவித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து குறித்து காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. ம.சா.ஆ.1 –ன் படி நானோ அல்லது நான் சென்ற வாகனத்தை ஓட்டி சென்ற நபரோ புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதாக எனது பெயர் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எனது பெயரில் புகாரோ அல்லது புகாரில் எனது

பெயரோ இல்லை என்றும், எனக்கு காயம் ஏற்பட்டதற்காக ஆவணத்தை தாக்கல் செய்யாததால் விபத்து ஏற்பட்ட தேதியில் எனக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றும், அதனால் 1, 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. மருத்துவ செலவீனம் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்து தேதியில் எனக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றும், அதனால் இழப்பீடு தொகை பெற சட்டப்படி தகுதி இல்லை என்றும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.